# நடப்பு நிகழ்வுகள் ஜனவரி 20.01.2018

- நாணயங்கள் தயாரிக்கும் பணியை மீண்டும் தொடங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்தியாவில் நாணயங்கள் சட்டம் 1906 ன் படி நாயணங்கள் வழங்கும் பொறுப்பு மத்திய அரசினுடையது.
- கட்டுமாணத் தொழில் மற்றும் ஒரே நிறுவன பொருட்கள் (பிராண்டில்) விற்பனையில் சில்லரை வர்த்தகத்தில் 100% நேரடி அந்நிய முதலீட்ற்கு மத்திய அரசு அனுமதி.
- 23 ஆண்டுகளுக்கு பிறகு புதிய 1 ரூபாய் நோட்டுகள் மீண்டும் அறிமுகம் 1994 ல் 1 ரூபாய் நோட்டு தடைசெய்யப்பட்டது.
- பொருளாதார வளர்ச்சி நடப்பு நிதியாண்டில் 6.3% சதவீதமாக சரிய வாய்ப்பு என்று மத்திய புள்ளியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.
- 2016 – 17 ஆம் ஆண்டில் இந்தியாவில் அதிக அளவில் முதலீடு செய்த நாடுகளில் மௌரீசியஸ் நாடு முதலிடத்தில் உள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.
- உலக பொருளாதார மன்றம் (World Econonic Forum) வெளியிட்டுள்ள உலக உற்பத்தியாளர் பட்டியலில் இந்தியா 30 வது இடத்தில் உள்ளது, முதலிடத்தில் ஜப்பான் உள்ளது.
- என்.எஸ்.ஜியின் (NSG) புதிய தலைவராக சுதீப் லக்தாகியா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- இந்தியாவின் 22 வது தலைமை தேர்தல் அதிகாரியாக ஓம் பிரகாஷ் ராவத் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது அசோக் லவாசா மற்றும் சுனில் அரோரா தலைமை தேர்தல் அதிகாரிகலாகவும் உள்ளனர்.
- இந்தியா வம்சாவளியை சேர்ந்த ஹிரிந்தர் மாலி மற்றும் இந்திரா நாயுடு ஹாரிஸ் என்ற இரண்டு பெண்களும் கனடாவின் ஒண்டாரியோ மாகாண அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- "அவா புயல்" மடகாஸ்கர் தீவைத் தாக்கியது.
- உலகின் மிகப் பெரிய நீர்வழிக் குகை மெக்சிகோவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாயன் பழங்குடியினர் பயன்படுத்திய 347 km தூரம் கொண்ட குகை கண்டறியப்பட்டுள்ளது.